4 பாடம்

# தேவனின் குணம்

***மிகவும் தொலைவில் உள்ள ஊரிலிருந்து உன் நண்பர்களோ அல்லது உறவினரோ உன்னிடம் தொலைபேசி அல்லது கடிதம் மூலம் பேசுவது உண்டா? அதன்மூலம் அவர்கள் எத்தகையவர்கள் என்பதை அறியலாம். இன்றைய பாடம் தேவன் எத்தகையவர் என்பதை நாம் அறிந்துகொள்ள உதவுகிறது.***

தேவன் மோசேயிடம், சீனாய் மலையிலே தம்மைச் சந்திக்க இஸ்ரவேலரை அழைத்து வரும்படிக் கூறினார். இஸ்ரவேலர் தம்மைச் சந்திக்க வருமுன்னே தங்கள் ஆடைகளைத் துவைத்து மிகவும் சுத்தமாக வரவேண்டும்; யாரும் மலையைத் தொடக் கூடாதென்றார். சீனாய் மலையின் அடிவாரத்தில் இருந்து தள்ளியே மக்கள் நிற்கவேண்டும் என்றும் தேவன் கூறியிருந்தார்.



அவ்விதமாகவே மக்கள் நின்றார்கள். கர்த்தர் சீனாய் மலையின்மேல் அக்கினியில் இறங்கியதால் மலை புகைக் காடாய் இருந்தது. மலை மிகவும் அதிர்ந்தது. எக்காளச் சத்தம் வரவர பலமாய்த் தொனித்தது.

தேவன் பேசினார்.

1. "உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே" என்றார்.

தாம் யார் என்பதையும் அவர்களைத் தாம் நேசிப்பதை அவர்கள் அறிந்து கொள்ளவும் விரும்பினார்.

தமது வல்லமைக்கு அவர்கள் மதிப்புக் கொடுப்பதன் மூலம் வாழ்வில் தாம் எவ்வளவு முக்கியம் என்பதை அவர்கள் அறிந்துகொள்ள விரும்பினார். எனவே, "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" என்றார்.

## மனன வசனம்

**உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை. சங்கீதம் 119:165.**

2. ‘‘சிலை வழிபாடு கூடாது’’ என்றார்.

வானத்திலோ, பூமியிலோ, பூமியின் கீழ்த் தண்ணீரிலோ உள்ள எதைப் போன்றும் எந்த ஓர் உருவத்தையும் செய்யக் கூடாது; அதை வழிபடவும் கூடாது என்றார். நெடுங்காலம் எகிப்திலே இஸ்ரவேலர்கள் அநேக சிலைகளை வழிபட்டு வந்தார்கள். எனவே தேவன் இந்தக் கட்டளையின் மூலம் மெய்யான வழிபாட்டை அவர்களுக்கு விளக்கினார்.

3. ‘‘உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனை கர்த்தர் தண்டியாமல் விடார்’’ என்றார்.

நாம் ஒருவரை உண்மையாய் நேசித்தால், அவருடைய பெயருக்கு இழுக்கு வருமாறு ஒருபோதும் நடக்கமாட்டோம் அல்லவா? இதை விளக்கவே தேவன் இந்தக் கற்பனையைக் கொடுத்தார்.

நம்மை அற்புதமாகப் படைத்து அக்கறையாக நம்மை நடத்துவதை நாம் அறிந்து கொள்ள விரும்பினார். எனவே,

4. ‘ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக’ என்கிற கற்பனையைக் கொடுத்தார்.

நாம் நன்கு ஓய்வு எடுத்து, அந்த ஓய்வுநாளிலே அதிக நேரம் நாம் தேவனுடன் உறவாடவும் விரும்பினார்.

5. பூமியிலே நீண்ட நாட்கள் சுகமாய் வாழ ‘உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக’ என்னும் ஐந்தாம் கற்பனையைக் கூறினார்.

நம்மை நேசிக்கவும் நம் தவறுகளைத் திருக்கவும் தேவன்



## செய்தி

**தேவனுடைய கற்பனைகள் நாம் அவரை அறிந்துகொள்ள உதவுகின்றன.**

தந்த பெற்றோரை மதிக்கவும், அவர்களுக்குக் கீழ்ப்படியவும் வேண்டும்.

ஆறு முதல் பத்து வரையிலான 4 கற்பனைகளும் மற்ற மனிதர்களிடம் நாம் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதைக் கூறுகின்றன.

6. “கொலை செய்யாதிருப்பாயாக” என்றார்.
7. “விபசாரம் செய்யாதிருப்பாயாக’ எனும் ஏழாம் கற்பனையைத் தந்தார்.
8. “களவு செய்யாதிருப்பாயாக” என்கிற எட்டாம் கற்பனையைத் தந்தார்.
9. “பிறனுக்கு விரோதமாகப் பொய்சாட்சி சொல்லாதே?” என்றார்.
10. “பிறருக்கு உரியவைகளை இச்சியாதே” என்றார்.

தேவன் எப்படிப்பட்டவர் என்பதை இந்தக் கற்பனைகள் நமக்கு வெளிப்படுத்துகின்றன.

**செய்முறை:** புள்ளிகளை ஒழுங்காக இணைத்து, கொடுக்கப்பட்டுள்ள படம் என்ன என்பதைக் கண்டுபிடி.

### புதிர் 4

